பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

21 07 2025 **MONDAY** **6.30 PM**

<u>மாநிலச் செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாடாளுமன்றத்தின் மழைக்கால கூட்டத்தொடர் சுமூகமாக நடைபெற உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

2. நாட்டின் முதலாவது இருவாச்சி பறவைகள் பாதுகாப்பு மையம் ஆனைமலை புலிகள் காப்பகத்தில் ஏற்படுத்தப்படவுள்ளதாக தமிழக அரசு கூறியுள்ளது.

3. மக்கள் நலனில் அக்கறையின்றி திமுக அரசு செயல்பட்டு வருவதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

4. சிவகாசி அருகே பட்டாசு ஆலையில் நேரிட்ட வெடி விபத்தில் மூன்று பேர் உயிரிழந்தனர். மூன்று பேர் காயமடைந்தனர்.

5. **Jubilaumsturenier Hofgeismar** ஓபன் குதிரையேற்றப்போட்டியில் இந்தியாவின் **Anush Agarwalla** தங்கப்பதக்கம் வென்றார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<>>>>>>

நாடாளுமன்றத்தின் மழைக்கால கூட்டத்தொடர் சுமூகமாக நடைபெற உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

மழைக்கால கூட்டத்தொடரில் பங்கேற்பதற்கு முன்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

ஆபரேஷன் சிந்தூர் வெற்றிக்கு பின்னர் நடைபெறும் கூட்டத்தொடர் இது என்றும் அவர் குறிப்பிட்டார்.

***<u>Sound Byte - மோடி (1) – 30 Sec.)</u>***

ராணுவத்திற்கு மேலும் வலிமை சேர்க்கும் வகையில் இந்த கூட்டத்தொடர் அமையும் என்றும் பிரதமர் கூறினார்.

***<u>Sound Byte - மோடி (2) – 28 Sec.)</u>***

நாடு விரைவான பொருளாதார வளர்ச்சியை கண்டு வருவதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

***<u>Sound Byte - மோடி (3) – 34 Sec.)</u>***

இதற்கிடையே, மக்களவை நடவடிக்கைகள் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் அமளி காரணமாக இன்று பாதிக்கப்பட்டன.

இந்நிலையில் நாடாளுமன்றத்தில் ஆக்கப்பூர்வமான விவாதத்தில் பங்கேற்க எதிர்க்கட்சிகள் தயங்குவது ஏன் என்று மத்திய அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கேள்வி எழுப்பியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள செய்தியில், ஆபரேஷன் சிந்தூர் உட்பட எந்தவொரு பிரச்சினை குறித்தும் விவாதிக்க மத்திய அரசு தயாராக உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும், இதற்கு செவி சாய்க்காமல் அவை நடவடிக்கைகளை முடக்குவது ஏற்புடையது அல்ல என்றும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

**<<<<<<>>>>>>**

தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் உடல்நலக்குறைவு காரணமாக சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நடை பயிற்சியின்போது ஏற்பட்ட லேசான தலைச்சுற்றல் காரணமாக அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முதலமைச்சருக்கு உரிய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மருத்துவமனையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**<<<<<<>>>>>>**

மாணவர்களிடையே புத்தக வாசிப்புப் பழக்கம் அதிகரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை பள்ளி கல்வித் துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி வலியுறுத்தியுள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டம் இலுப்பக்கோட்டை அரசு மேல்நிலைப்பள்ளியில் தனியார் அறக்கட்டளை சார்பாக அமைக்கப்பட்ட நூலகத்தை திறந்துவைத்து அவர் பேசினார்.

***Sound Byte - அன்பில் - 40 Sec.)***

**<<<<<<>>>>>>**

நாட்டின் முதலாவது இருவாச்சி பறவைகள் பாதுகாப்பு மையம் தமிழகத்தில் ஏற்படுத்தப்படவுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

கோவை மாவட்டம் ஆனைமலை புலிகள் காப்பகத்தில் இதற்கான சிறப்பு மையம் அமைக்கப்பட உள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதற்காக ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்மூலம், இருவாச்சிப்பறவைகள் பாதுகாப்பை நிறுவனமயமாக்கிய முதல் மாநிலமாக தமிழகம் உருவெடுத்துள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

மக்கள் நலனில் அக்கறையின்றி திமுக அரசு செயல்பட்டு வருவதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று திருநெல்வேலியில் 10 மாவட்டங்களை சேர்ந்த பிஜேபி நிர்வாகிகளோடு ஆலோசனை மேற்கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படவில்லை என்று அவர் குறை கூறினார்.

மாநிலத்தில் கடந்த 24 மணிநேரத்தில் மட்டும், 10 கொலை சம்பவங்கள் நடைபெற்றுள்ளதாக அவர் கூறினார்.

போதைப்பொருள் புழக்கத்தை கட்டுப்படுத்தவும் திமுக அரசு தவறிவிட்டதாக திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக திரு **Manindra Mohan Shrivastava** இன்று பதவியேற்றுக்கொண்டார்.

ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆளுநர் திரு ஆர் என் ரவி அவருக்கு பதவி பிரமாணம் செய்துவைத்தார்.

<<<<<<>>>>>>

சிவகாசி அருகே பட்டாசு ஆலையில் இன்று நேரிட்ட வெடி விபத்தில் மூன்று பேர் உயிரிழந்தனர். மூன்று பேர் காயமடைந்தனர்.

மருந்து கலவையின்போது ஏற்பட்ட உராய்வின் காரணமாக இந்த விபத்து நேரிட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(‘Voice Byte - கமலக்கண்ணன் - 30 ‘Sec.)***

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 4 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

கிருஷ்ணகிரியில் ஒருமாதமாக நடைபெற்றுவந்த மாங்கனி கண்காட்சி இன்று நிறைவடைந்தது.

சிறந்த அரங்கிற்கான முதல் பரிசை தோட்டக்கலைத்துறை வென்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

***(Voice Byte - ராஜா – 35 ‘Sec.)***

<<<<<<>>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த சில தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வுமையம் கூறியுள்ளது.

நீலகிரி, கோவை, தேனி, தென்காசி, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

அரியலூர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளராக திரு விஷ்வேஸ் பாலசுப்பிரமணியம் சாஸ்திரியும், நாமக்கல் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளராக திருமதி விமலாவும் இன்று பொறுப்பேற்றுக்கொண்டனர்.

------------------

நாமக்கல் மாவட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்குமாறு ஆட்சியர் திருமதி துர்கா மூர்த்தி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

-----------------

ராணிப்பேட்டை தலைமை தபால் நிலையத்தில் அஞ்சல் ஆயுள் காப்பீடு விற்பனைக்கான முகவர் பணியிடங்களுக்கான நேர்காணல் வரும் 26-ஆம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

----------------

சென்னை சென்ட்ரல் - விஜயவாடா இடையேயான பினாக்கினி அதிவிரைவு ரயில், வரும் 24-ஆம்தேதி பிற்பகல் மணி 2.05-க்கு பதிலாக 3.05-க்கும், வரும் 31-ஆம் தேதி பிற்பகல் மணி 3.35-க்கும் புறப்பட்டு செல்லும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

**Jubilaumsturenier Hofgeismar** ஓபன் குதிரையேற்றப்போட்டியில் இந்தியாவின் **Anush Agarwalla** தங்கப்பதக்கம் வென்றார்.

ஜெர்மனியில் நடைபெற்ற இப்போட்டியில் 69 சதவீத புள்ளிகளை பெற்று அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

--------------

ஸ்பெயினில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியின் முதலாவது தகுதி சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் **Adil Kalyanpur** வெற்றிபெற்றார்.

--------------

உலக ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் **‘Anika Dubey** இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**<<<<<<END>>>>>>**